# ஓம்(அ.உ-ம்) அருணாசலமாலை

(அ)

அப்பனே வந்த டைந்தேன் அருணாசலா!
அன்னை போ லாண்டு கொள்வாய் ”
அனைத்தையு மறத்து நந்தேன் ”
அன்புகொண் டோடி வந்தேன் ”
அலைமனத் துன்னை வைத்தேன் ”
அசலமாய் நின்று காப்பாய் ”
அறியாத பால கன்யான் ”
அறிவாகி யுள்வி ளங்காய் ”
அருவுரு வான ஜோதி ”
அகண்டசிற் சக்தி யாவாய் ”
அறிவெதை யறியு மோதான் ”
அதன்மய மாவை நீயே ”
அந்தரத் தாழ்ந்து காண்பார் ”
அனைத்திலு முன்னைக் காண்பார் ”
அகமக மென்றெ னுள்ளே ”
அம்பலக் கூத்த னாவாய் ”

அருளினா லறிய நிற்பாய் அருணாசலா!
அமுதினில் வெண்ணெய் போன்றாய் ”
அன்னிய மெண்ணா வாழ்வே ”
அமைதியாம் வாழ்க்கை யென்றாய் ”

(உ)

உவந்துனை யுள்ளே கண்டோர் அருணாசலா!
உலகெலாங் காண நின்றாய் ”
உன்னையே தாமாய்க் காண்போர் ”
உளத்துளே தானாய் நின்றாய் ”
உன்சுட ரின்றிக் கண்கள் ”
உண்மையைக் காண்ப தெங்கே ”
உண்மையா யறிவு செய்வார் ”
உன்மய மிலகி வாழ்வார் ”
உளங்கவர் காந்த மானாய் ”
உன்சுடர்ப் பூச்சி யானேன் ”
உள்ளவா றுன்னை யென்னுள் ”
உள்ளமாய்க் கண்டு ணர்ந்தேன் ”
உதித்துழி யொடுங்கி விட்டேன் ”
உன்னரு ளுண்டு வாழ்வேன் ”
உலகொளிர் விளக்குக் கெல்லாம் ”
ஒளியென விளங்கு கின்றாய் ”
உண்மையின் பறிவு நீயே ”
உலகெலாங் கோயில் கொண்டாய் ”
உயிருல கிறையு நீயே ”
உணர்த்திடுங் குருவு நீயே ”

(ம)

மனக்குகை யிருத்தி யென்னை அருணாசலா!
மௌனோப தேசஞ் செய்தாய் ”
மட்டிலா வின்ப வெள்ளம் ”
மனக்கடலாக்கி விட்டாய் ”
மருளுறு முலகை முற்றும் ”
மறந்துனை நினைந்து வாழ்வேன் ”
மயக்கெலா மொழிப்ப தற்கே ”
மலைமருந் தாகி நின்றாய் ”

மகனெனத் தடுத்தாட் கொண்டாய் அருணாசலா!
மகனினு மன்பு பூண்டேன் ”
மகிதல வுயிர்க ளெல்லாம் ”
வளர்வதுன் னன்பி லன்றோ ”
மயக்குறு மனப்பேய் சாக ”
மந்திரம் மௌன மன்றோ ”
மலரடி வீடு சேர்ந்தேன் ”
மற்றொரு பற்று மில்லேன் ”
மன்னுயி ருலக மெல்லாம் ”
மங்கள மாக வாழ்க ”

அருணாசல ஓம் அருணாசலா!